# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2024 யூலை

## (203) வணிகச் சட்டம்

இந்த வினாத்தாள், (203) வணிகச் சட்டம் - 2024 யூலை பரீட்சை ஆனது 07 கட்டாய வினாக்களை உள்ளடக்கியதாக **பகுதி A, பகுதி B, பகுதி C** என மூன்று பகுதிகளாகக் காணப்பட்டது. இந்த வினாத்தாளானது மொத்தத்தில் பரீட்சார்த்தியின் வணிகச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்தது.

மதிப்பீட்டுச் செயன்முறையின்போது அவதானிக்கப்பட்ட பொதுவான விடயங்கள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன :

## பகுதி - A

### வினா இல. 01

இந்த வினா 25 புள்ளிகளுக்காக 14 பகுதிகளைக் கொண்டிருந்தது.

இவ்வினாவுக்கு அதிகளவானவர்கள் விடையளித்திருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் அரைவாசிக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் 20 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் வினா இல. **1.1, 1.10, 1.13** ஆகியவற்றுக்கு விடையளிக்கத் தவறியிருந்ததை அவதானிக்க முடிந்தது. அதிகளவான பரீட்சார்த்திகளிடம் குற்றவியல் நியாயாதிக்கம், உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் CIF உடன்படிக்கை ஆகியவற்றின் முதன்மையான விடயங்கள் பற்றி போதிய அறிவு காணப்படவில்லை.

பரீட்சார்த்திகள் **பகுதி A** இற்கு கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்கு குற்றவியல் சட்டம், பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டம், ஒப்பந்தச் சட்டம், சர்வதேச சட்டம், மாற்றத்தகு சாதனங்கள் மற்றும் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை போன்றவற்றில் சிறந்த அறிவைக் கொண்டிருக்க வேண்டும். இது சித்திப் புள்ளியை அடைவதற்கு பெருமளவில் பங்களிப்புச் செய்யும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## பகுதி - B

### வினா இல. 02

**(a)** இது முகவராண்மைச் சட்டத்துடன் தொடர்புடைய ஓரளவு இலகுவான வினாவாகும். கணிசமான எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் முகவராண்மைத் தொடர்பைக் காட்டிலும் ஊழியர் - தொழில்தருநர் உறவு மீது கவனம் செலுத்தியிருந்தனர். சில பரீட்சார்த்திகளால் ‘‘உடன்படிக்கை / வெளிப்படுத்தல் மூலமான முகவராண்மை’’ இன் தன்மையை ஏற்பிசைவு செய்ய முடியவில்லை என்பதைக் காண முடிந்தது. அத்துடன் பல பரீட்சார்த்திகள் முகவராண்மையின் தன்மைக்கும் முகவர்களின் அதிகாரத்திற்குமிடையிலான வேறுபாட்டை விளங்கிக்கொள்ளவில்லை. வினாவின் பாட விடயங்களை அடையாளம் கண்டிருந்த பரீட்சார்த்திகள் சரியான விடைகளை வழங்கியிருந்தனர்.

**(b)** அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதியை விளங்கிக் கொள்ளவில்லை. முகவரின் வழமையான உட்கிடை அதிகாரம் பரீட்சார்த்திகளால் ஏற்பிசைவு செய்யப்படவில்லை. **விதேஷிகா** தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றத் தவறியதால், **பிராங்** இனால் **பண்டார**விடமிருந்து நட்டஈடு கோர முடியாது என அதிகளவான பரீட்சார்த்திகள் குறிப்பிட்டிருந்தனர். அவர்கள் அதிகார வரம்பு பற்றி **பிராங்** அறிந்திருக்கவில்லை என்பதைக் குறிப்பிடவில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 03

இது பங்குடமைச் சட்டம் மற்றும் கம்பனிச் சட்டத்துடன் தொடர்புடைய ஓரளவு இலகுவான வினாவாகும்.

**(a)** இப்பகுதி, பங்குடமைச் சட்டம் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் பங்குடமைச் சட்டம் பற்றி போதிய அறிவைக் கொண்டிருந்தனர். அவர்கள் **கூரே**யிற்கான நட்டஈட்டைச் செலுத்துவதற்கு பங்காளர்கள் பொறுப்புடையவர்கள் எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**(b)** இப்பகுதியானது, கம்பனிச் சட்டம் பற்றிய விடய அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு சரியாக விடை அளித்திருந்தனர். கம்பனி ஒன்றின் சட்ட ஆளுமை பற்றிய பரீட்சார்த்திகளின் புரிதல் சிறப்பாக இருந்தது. ஆனால், அவர்கள் அனைவரும் பங்குகளால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் மீது மாத்திரமே கவனம் செலுத்தியிருந்ததுடன் உத்தரவாதங்களால் வரையறுக்கப்பட்ட கம்பனிகளை ஏற்பிசைவு செய்திருக்கவில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 04

இவ்வினா அருவச் சொத்துக்கள் சட்டத்துடன் தொடர்புடையதாக இருந்தது.

**(a)** அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடைகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

**(b)** சில பரீட்சார்த்திகள் சரியாக விடை அளித்திருந்தனர். அவர்கள் **மாலினி**யிடமிருந்து முறையான அதிகாரத்தைப் பெறாமல் **அனில்** புத்தகத்தை மீள்பதிப்புச் செய்யவோ, விற்பனை செய்யவோ அல்லது விநியோகிக்கவோ முடியாது எனக் குறிப்பிட்டிருந்தனர். சிலர் காப்புரிமையாக நாடக புத்தக வேலையை தவறாக விளங்கிக்கொண்டிருந்தனர். அத்துடன் அவர்கள் பதிப்புரிமையானது பதிவு செய்யப்படாமலே இலங்கையில் பாதுகாக்கப்படலாம் என்பதை தவிர்த்திருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 05

இது காப்புறுதிச் சட்டத்துடன் தொடர்புடைய ஓரளவு இலகுவான வினாவாகும்.

**(a)** இப்பகுதி இழப்பீட்டுத் தத்துவம் மற்றும் பங்களிப்புப் பிரயோகங்கள் பற்றிச் சோதித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன், அளிக்கப்பட்டிருந்த விடைகளும் திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டன. அவர்களுள் பெரும்பாலானவர்கள் இழப்பீட்டுத் தத்துவத்தின் கீழ், ‘‘காப்புறுதியிலிருந்து இலாபத்தைச் சம்பாதிக்க முடியாது’’ எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**(b)** இந்தப் பகுதி மிகவும் இலகுவானதாக இருந்ததுடன் பலர் சரியான விடைகளை அளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் ''காப்பீட்டாளர்'' மற்றும் ''காப்பீடு செய்தவர்'' ஆகிய பதங்களில் தெளிவின்றி சிக்கியிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 06**

இவ்வினா பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்துடன் தொடர்புடையதாகும்.

**(a)** அதிகளவான பரீட்சார்த்திகள் பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டம் பற்றிய போதிய அறிவைக் கொண்டிருந்தனர். அவர்களுள் அதிகமானவர்கள் வாணிபத்திற்கேற்ற தன்மை பற்றி குறிப்பிட்டிருந்தனர்.

**(b)** பெரும்பாலானவர்கள் பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழ், பொருள்களின் வகைகள் பற்றிய அறிவைக் கொண்டிருக்கவில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## <u>பகுதி - C</u>

**வினா இல. 07**

இவ்வினா இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது.

<u>பகுதி (A)</u>

இப்பகுதி ஒப்பந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

**(a)** சில பரீட்சார்த்திகள் வலிதான ஒப்பந்தம் இல்லை எனக் குறிப்பிட்டிருந்தனர். ஒப்பந்தச் சட்டத்திலுள்ள ஒரு கொடைமுனைவை மற்றைய தரப்பினருக்குத் தெரிவித்து, அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் மாத்திரமே அது முழுமையடையும்.

**(b)** இந்தப் பகுதி மிகவும் இலகுவான ஒரு பகுதியாகும். ஆனால், அதிகளவான பரீட்சார்த்திகள் வலிதான ஒப்பந்தம் ஒன்றின் கூறுகளை எழுதாமல் கொடைமுனைவு ஒன்றின் கூறுகளை எழுதியிருந்தனர்.

**மொத்தத்தில், இந்த வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

<u>பகுதி (B)</u>

இந்தப் பகுதி தொழிற் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

**(a)** இந்த விவரணமானது ஊழியர் மற்றும் ஒப்பந்ததாரர் ஆகியோரை அடையாளங் காணுவதை அடிப்படையாகக் கொண்டதாகும். அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு சரியான விடைகளை அளித்திருந்தனர். அவர்கள் **சில்வா** ஒரு ஊழியர் என அடையாளங் கண்டிருந்தனர்.

**(b)** இப்பகுதி, பணிக்கொடை தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது.

  **(i)** சில பரீட்சார்த்திகள் **நஸீரின்** பணிக்கொடையை சரியாகக் கணிப்பிட்டிருந்தனர்.

(ii) அதிகளவான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கான சரியான விடைகளை அளித்திருந்தனர். ஆனால் குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகளால் EPF மற்றும் ETF ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாட்டை அடையாளங் காண முடியவில்லை. பலர் தரப்பட்ட விவரணத்தை ETF ஆக தவறாக விளங்கிக் கொண்டிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

மொத்தத்தில், இவ்வினாத்தாளுக்கான செயலாற்றுகை சிறப்பாக இருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் முழு வினாத்தாளுக்குமான புள்ளிகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

- - -

**<u>பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்துவதற்கு கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள் :</u>**

(1) பாடத்திட்டத்தை முழுமையாகப் படிப்பதுடன் அடிக்கடி கேட்கப்படும் பாட விடயங்களில் விசேட கவனம் செலுத்தவும்.

(2) வினாக்களை கூர்ந்து வாசித்து, வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை அளிக்கவும்.

(3) வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் செவ்வை நிரல் வினாத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs) தவிர்நத ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்திற்கு ஏற்ப வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

(4) சுய கற்றல் புத்தகம், மேலதிக புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பாடத்துடன் தொடர்புடைய ஏனைய வேறு விடயங்களையும் கற்றுக் கொள்ளவும்.

(5) ஆற்றல்களைக் கட்டியெழுப்புவது சரியாக இனங்காண்பதற்கு அவசியமானதாகும். வினாத்தாளுக்கு விடையளிக்கும்போது அடிப்படைக் கோட்பாடு ரீதியான எண்ணக்கருக்களை ஒப்பீடு செய்யவும்.

(6) கையெழுத்து தெளிவாக எழுதப்படுவதையும் வினா இலக்கங்கள் சரியாக இடப்படுவதையும் உறுதி செய்யவும்.

(7) வினாத்தாளில் தரப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

(8) கடந்தகால வினாத்தாள்களுக்கு விடையளித்து, பரிந்துரைக்கப்பட்ட விடைகளுடன் ஒப்பீடு செய்வதன் மூலம் நடைமுறை அனுபவத்தை மேம்படுத்திக் கொள்ளவும்.

(9) சரியான நேர முகாமையில் கவனம் செலுத்தவும்.

(10) விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன்னர், வினா இலக்கங்களும் சுட்டிலக்கமும் சரியாக எழுதப்பட்டுள்ளனவா என்பதை மீளவும் பரீட்சித்துக் கொள்ளவும்.

(11) முன்னாயத்தத்துடனும், பரீட்சையில் சித்தியடையும் உறுதியுடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -